**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **SC NO. 126 / 2018** |
| **Deposition of witness for** | **:** | **PW : 10** |
| **Name** | **:** | **Dr.திரு. ராகவகணேசன்** |
| **Father's / Husband's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **14.03.2024**

எதிரி-1 ஆஜர். எதிரிகள் 2,3,4 ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் தற்போது மதுரை மருத்துவக் கல்லூரியில் சட்டம் சார்ந்த மருத்துவத் துறையில் பயிற்று ஆசிரியராக பணிபுரிந்து, தற்போது பணி ஓய்வு பெற்று மதுரையில் வசித்து வருகிறேன். கடந்த 19.01.2010 ம் தேதி பிற்பகல் 02.30 மணிக்கு நான் கல்லூரியில் அலுவலில் இருக்கும் போது கனம் மதுரை sub divisional magistrate அவர்களின் அறிக்கை கடிதமும் ROC No.720/M / 2010 /date 19.01.2010 மற்றும் B5 தெற்குவாசல் காவல் நிலைய குற்ற எண். 89/2010 வழக்கில் கண்ட இறந்துபோன சுமார் 27 வயது மதிக்கத்தக்க பொன்மலர் என்ற பெண் பிரதத்தை நானும் என்னுடன் பணியாற்றிய மருத்துவர்.செல்வராஜ் என்பவரும் இணைந்து சடலக் கூராய்வு மேற்கொண்டோம். பிரேதத்தை தெற்குவாசல் காவல்நிலைய காவலர் 1930 திரு.ராஜாபாண்டியன் என்பவர் அடையாளம் காட்டினார்.

பிரேதத்தின் உடல்முழுவதும் பிண விரைப்புடனும் உடல் நடுத்தர ஊட்டத்துடனும், கை, கால் விரல் நகங்கள் ஊதா நிறத்திலும் மலக்குடலின் வெப்பநிலை 21° C ல் இருந்தது. பிரேத்தில் இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயங்கள் கீழ்கண்டவாறு இருந்து :

1) பிரேத்தில் பரந்த மேலெழுந்தவாரியான தீக்காயங்கள் முகம் முழுவதும் கழுத்தின் முன் மற்றும் பின் பகுதியில் மார்பு மற்றும் வயிற்றுப் பகுதியின் முன் மற்றும் பின் பகுதியிலும் இரண்டு மேல் கைகள் முழுவதும், முன் கைகள் முழுவதும் , உள்ளங்கை முழுவதும், இரண்டு தொடைகள், முழங்கால், கால்கள், பாதங்கள் முழுவதும் இருந்தது.

2) காயத்தின் அடிப்பகுதி சிவந்தும் தோல்கள் ஆங்காங்கே உரிந்தும் கருகியும் காணப்பட்டது.

3) இரண்டு உள்ளங்கைகள் மற்றும் பாதங்களில் உள்ள தோல்கள் பாதி உரிந்த நிலையில் இருந்தது.

4) புருவமுடி,. இமைகள், அக்குள் முடி, பிறப்புறுப்பில் உள்ள முடிகள் மற்றும் தலை முடிகள் கருகி காணப்பட்டது.

5) கருகிய தலை முடியில் மண்ணெண்ணெய் நெடி காணப்பட்டது.

**<u>குறிப்பு</u>** *உடலை* மேலெழுந்தவாரியாக கீரிப்பார்க்கையில் வேறு எவ்வித காயங்களும் காணப்படவில்லை. மார்பு கூடு, வயிற்றுக் கூடு ஆகியவை காலியாகவும் இதய மேலுறையில் 15 மில்லி லிட்டர் வைக்கோல் நிற திரவமும் இதயத்தின் வலது அறையில் திரவ இரத்தமும் இடது அறைகள் காலியகவும் இதய தமணி சீராகவும், குரல்வளை, மூக்சுக்குழாய் மற்றும் நாவடி எலும்பு சீராகவும் குரல்வளையை அறுத்து ஆய்வு செய்ததில் அதன் உள்ளே புகை துணுக்குகளும் இரைப்பையில் 200 மில்லி லிட்டர் மர நிற திரவம் எவ்வித நெடி இல்லாமலும் அதன் சிலேட்டும மடலம் சீராகவும், சிறு குடலில் 20 மில்லி லிட்டர் மர நிற திரவம் எவ்வித குறிப்பிட்ட நெடி இல்லாமலும் அதன் சிலேட்டும படலம் சீராகவும், சிறுநீர் பை மற்றும் கர்ப்பபை காலியாகவும், நுரையீரல்கள் , கல்லீரல், மண்ணீரல், மற்றும்

சிறுநீரகங்கள், மூளை ஆகியவை அதன் வெட்டுத் தோற்றத்தில் இரத்தச் செறிவுடன் காணப்பட்டது.

கருத்து நிலுவையில் வைக்கப்பட்டு, உடல் உள்ளுறுப்புக்கள் இரசாயன பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு அறிக்கை பெறப்பட்டதில், இறுதி கருத்தாக இறந்த நபர் அவருக்கு ஏற்பட்ட சுமார் 100% பரந்த மேலெழுந்தவாரியான தீக்காயங்களினால் இறந்திருக்கக் கூடும் என்று சான்று வழங்கினோம். **பிரேத பரிசோதனை அறிக்கை அதசாஆ.9, இறுதி அறிக்கை அதசாஆ.10 ஆகும்.** போலிசார் என்னை விசாரித்தார்கள்..

**குறுக்கு விசாரணை (எதிரி1 தரப்பில்) :**

வேண்டுகோள் கடிதத்தில் வழக்கின் சுருக்கம் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த வழக்கின் சுருக்கத்தைப் படித்துப் பார்த்து தான் பிரேத பரிசோதனை செய்தேன் என்றால் வழக்கமாக வழக்கின் சுருக்கம் படித்துப் பார்த்து பிரேத பரிசோதனை செய்வது வழக்கம். இறந்த நபரின் குதத்தின் வெப்பம் இருந்திருக்கிறது என்று அதசாஆ.9 ல் குறிப்பிட்டுள்ளேன். குதத்தில் உள்ள வெப்பத்தை வைத்தும் வெளியில் உள்ள வெப்ப நிலை வைத்தும் இறப்பு நேரம் குறிப்பிட குறிப்பிட்ட formula உள்ளது என்றால் சரிதான். அந்த formula அடிப்படையில் தான் இந்த வழக்கில் இறந்த நபரின் இறப்பு நேரம் குறிப்பிட்டுள்ளேன் என்றால் இந்த வழக்கில் இறந்த நபரின் இறப்பு நேரத்தை அதசாஆ.9 ல் குறிப்பிடவில்லை. தீக்காயங்கள் ஏற்பட பல காரணங்கள் உண்டு என்றால் சரிதான். மண்ணெண்ணெய் என்பது டீசல், பெட்ரோல், ஆகியவற்றில் இருந்து வடிகட்டி எடுக்கப்படுகின்ற திரவம் என்றால் சரிதான். டீசல், பெட்ரோல், ஆகியவற்றில் இருந்து வடிகட்டி எடுக்கப்படுகின்ற மண்ணெண்ணெய் தவிர மேலும் அதை சிதைத்து பல பொருட்கள் கிடைக்கப் பெறுகிறது என்றும் இறுதியாக தார் கிடைக்கப் பெறுகிறது என்றால் சரிதான். மேற்படி பொருட்களின் மூலப்பொருளானது பூமியில் இருந்து எடுக்கப்படுகின்ற குரூடாயில் என்றால் சரிதான். கரூடாயில் மற்றும் அதில்

இருந்து கிடைக்கப்பெறுகின்ற பொருட்கள் எரியும்போது கிடைக்கின்ற மனம், ஒரே மாதிரியாக இருக்கும் என்றும் ஆனால் சில நுணுக்கமான வித்தியாசங்கள் இருக்கும் என்றால் சரிதான். அதசாஆ.9 ல் இறந்த நபரின் வெளிப்புற காயங்கள் பற்றி குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். தீக்காயங்கள் குறித்து அளவுகள் உண்டு என்றால் சரிதான். Rule of 9 என்பது வெளிப்படையாக இருக்கின்ற தீக்காயங்கள் வைத்து சொல்லப்படுகிறது என்றால் சரிதான். தோலுக்கு கீழே உள்ள காயங்கள் குறித்து degree என்று அழைக்கப்படுகிறது என்றால் சரிதான். அதசாஆ.9 ல் இறந்த நபருக்கு எத்தனை விழுக்காடு தீக்காயம் இருந்தது என்று சொல்லப்படவில்லை என்றாலும் அதசாஆ.10 இறுதி அறிக்கையில் தான் சொல்லியுள்ளேன் என்றும் அந்த தீக்காயத்தின் விழுக்காடு rule of 9 வைத்து தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தோலில் தீக்காயத்தினால் ஏற்பட்டு, அது மண்ணெண்ணெயினால் ஏற்பட்டிருந்தால் அதற்கென்று தனியாக அடையாள குறியீடு இருக்கும் என்றால் சரிதான். இந்த வழக்கில் இறந்த நபரின் உடலில் அவ்வாறு தனியாக குறியீடு எதுவும் நான் பார்க்கவில்லை மற்றும் அது பற்றி அதசாஆ.9  மற்றும் 10 ல் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பாதிக்கப்பட்ட தோலின் அருகில் இருக்கின்ற தோலை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி பகுப்பாய்வு செய்தால் அது எந்த திரவத்தினால் தீக்காயம் ஏற்பட்டு இருக்கிறது என்று தெரியும் என்றால் அது பற்றி என்னால் கருத்து சொல்லஇயலாது. உடலில் உள்ள தோலில் ஏற்பட்ட தீக்காயங்களிலிருந்து ஒருவகையான நெடி வரும் என்றால் சரிதான். அந்த நெடி மனத்தை வைத்து அந்த தீக்காயம் எதனால் எப்படி ஏற்பட்டிருக்கும் என்று தோராயமாக சொல்ல முடியும் என்றால் சரிதான். தீக்காயத்தினால் ஏற்பட்ட நெடியை எங்கிருந்தது என்று குறித்து அதசாஆ.9 ல் குறிப்பிட்டுள்ளேன். அதில் unburned scalp hair emit smell of kerosene என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதன் அடிப்படையில்  தான் இறந்திருக்கலாம் என்று சொல்லியுள்ளேன் என்றால் அதனால் மட்டும் என்று

சொல்லிவில்லை. தீக்காயங்களினால் மட்டும் இறந்திருக்கலாம் என்று அதசாஆ.9 ல் சொல்லியுள்ளேன். அதசாஆ.9 ல் குறிப்பிட்டுள்ள தீக்காயங்களினால் இறப்பு ஏற்படுவதற்கு தோலுக்கு அடியில் உள்ள சதை, எலும்பு, உள்ளுறுப்புகள் பாதிப்பைப் பொறுத்து அமைகிறது என்றால் சரிதான். இந்த வழக்கில் தோலுக்கு அடியில் இருக்கின்ற சதை, உள்ளுறுப்புகள் பாதிக்கப்பட்டிருந்தால் அது எத்தனை degree என்று குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். இந்த வழக்கில் இறந்த நபரின் உடல்உள்ளுறுப்புகளில் எத்தனை degree பாதிப்பு இருந்தது என்று அதசாஆ.9 ல் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அதசாஆ.9 ல் முடியில் தலைதோலிலும் மண்ணெண்ணெய் வாடை இருந்தது என்று சொல்லியிருப்பது தவறு என்றும் போலிசார் கொடுத்த வழக்கின் சுருக்கத்தின் அடிப்படையில் அவர்களின் வேண்டுகோளின் படி கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அதேபோல், இறந்த நபரின் இறப்பிற்கான காரணமும் சரியானதல்ல என்றும் வழக்கின் சுருக்கத்தில் உண்மையில் அவருக்கு எங்கு எப்படி காயம் ஏற்பட்டது என்றும் அவர் எப்பொழுது மருத்துவமனைக்கு எடுத்து வரப்பட்டார் என்பதும் போலிசாரால் மறைக்கப்பட்டது என்றும் அதனால் எனது அதசாஆ.10 கருத்துரை தவறானது என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி 2 முதல் 4 தரப்பில்) :</u>**

1 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சுருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை